**தலைப்பு 135 - பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு தலைப்பிற்குமான விபரமான அறிக்கை

## I ஆம் பகுதி

**பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்

| தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 293 | இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதிஏற்பாடும் செலவும்

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 2,854,148,050 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 2,724,020,277

பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்பு முறையே ரூபா 81,384,648 மற்றும் ரூபா 48,743,125 அல்லது தேறிய நிதி ஏற்பாட்டில் 4 சதவீதம் மற்றும் 5 சதவீதம் ஆகக் காணப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 135 | 2,004,298,050 | 1,922,913,402 | 81,384,648 | 4 |
| 293 | 849,850,000 | 801,106,875 | 48,743,125 | 6 |
| மொத்தம் | **2,854,148,050** | **2,724,020,277** | **130,127,773** | 5 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

மீளாய்வாண்டின் போது பல்வேறு செயற்பாடுகளுக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 70,790,059 தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 57,622,966 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி வழங்கப்பட்ட நியேற்பாட்டில் ரூபா 13,167,093 அல்லது 19 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

2013 ஆம் ஆண்டிற்கான 20-02-01-04 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்கு பிரதேச தோட்டக் கம்பனிகளிலிருந்து கிடைக்கின்ற குத்தகை வருமானமாக ரூபா 950,028,664 மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 694,530,337 தொகை அதாவது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 73 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் படி ரூபா 255,498,327 தொகையினால் அல்லது 27 சதவீதத்தால் மதிப்பிடப்பட்ட வருமானம் அடையப்பட்டிருக்கவில்லை.

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 13501 | 6,000,000 | 4,227,579 | 2,800,000 | 5,183,253 | 30,000,000 | 15,647,422 |
| 29301 | 18,000,000 | 11,487,763 | 10,200,000 | 10,699,071 | 54,000,000 | 32,117,272 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 2.4.1 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட கட்டுநிதி மீதி ரூபா 37,390,727 கூட்டுமொத்தமாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு / திணைக்களம் | கட்டுநிதி கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | 7002/0000/000/0331/0013 | 6,132,650 |
| இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் | 7002/0000/000/0300/0013 | 31,258,077 |
| மொத்தம் | | 37,390,727 |

### 2.4.2 பொதுவைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட வைப்புக் கணக்குகளின் மீதி ரூபா 59,939,516 கூட்டுமொத்தமாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு / திணைக்களம் | கட்டுநிதி கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | 6000/0000/000/0015/0047 | 4,322,832 |
| இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் | 6000/0000/000/0015/0148 | 55,616,684 |
| | | --------------- |
| மொத்தம் | | 59,939,516 |
| | | ========== |

## 2 ஆம் பகுதி

## ஒவ்வொரு தலைப்பிற்குமான விபரமான அறிக்கை

**1. தலைப்பு 135 – பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கும் வருமானக் கணக்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 திசெம்பர் 24 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 05 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்ட ஒரு கணக்காய்வு ஐய வினாவிற்கும் 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

-------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மூலதன செலவின விடயமொன்றுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 500,000 தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 08 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 50 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையிலான விச்சினைக் கொண்டிருந்தது.

**(இ) கட்டுநிதிக் கணக்குகள்**

---------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப் பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக 11 பதவி நிலையற்ற உத்தியோகத்தர்களுக்கு 36 சந்தர்ப்பங்களில் ரூபா 197,000 கூட்டுத்தொகையான உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ii) நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், செயற்பாடு நிறைவுபெற்று 02 மாத தாமதத்தின் பின்னர் மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது.

(iii) நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் ஒரு பதவிநிலை உத்தியோகத்தருக்கு ஒரு சந்தர்ப்பத்தின் போது வழங்கப்பட முடியுமான ஆகக்கூடிய செயல்நிமித்த உபகட்டுநிதி ரூபா 20,000 ஆக இருந்த போதிலும், அந்த பிரமாணங்களுக்கு முரணாக ஒரு சந்தர்ப்பத்தின் போது உத்தியோகத்தரொருவருக்கு ரூபா 25,000 தொகை செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(iv) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காசேட்டைத் தீர்த்தல் தொடர்பில் 2013 நவம்பர் 08 ஆந் திகதிய 04/2013 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கீழுள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சுச் செயலாளரினால் தமது அலுவலகத்தினதும் உப அலுவலகங்களினதும் கணக்குகளைத் தீர்க்கும் வகையில் பொறுப்புவாய்ந்த பதவிநிலை உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.
- மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காசேட்டின் மீதி தொடர்பான குறிப்புக்களை வங்கிக்குக் கையளித்து வங்கியிலிருந்து வரவு அறிவித்தலொன்றைப் பெற்று அதனை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு தாமதமின்றி சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2014 சனவரி 23 ஆந் திகதி வரையிலும் அது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வருமானக் கணக்கு**

--------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் ரூபா 362,266,312 கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த வருமானம் 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலவீச்சிக்குரியதாகும். அந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ii) மீளாய்வாண்டின் போது ரூபா 950,028,664 தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 694,530,337 தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அந்த சேகரிக்கப்பட்ட வருமானத்தில் ரூபா 500,569,015 தொகை 2013 ஆம் ஆண்டிற்குரிய வருமானமாக

இருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் ஏறத்தாள 53 சதவீதமாக இருந்தது.

(iii) நிதிப்பிரமாணம் 175(ஆ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் மீளாய்வாண்டின் திருத்தயமைக்கப்பட்ட வருமான மதிப்பீடான ரூபா 756,066,945 குத்தகை வாடகை வருமானத்தில் 34 சதவீதத்தினை அல்லது ரூபா 255,497,930 தொகையினை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. மீளாய்வாண்டில் அகவலத்தை தோட்டக் கம்பனியிடமிருந்து அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 42,444,852 தொகையான மதிப்பிடப்பட்ட வருமானத்தில் ஒரு தவணைப் பணமேனும் அறவிடப்படாதிருந்ததுடன் 20 பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளில் 11 இடமிருந்து குத்தகை வாடகை வருமானத்தை அறவீடு செய்தலின் நிலுவை 25 சதவீதம் முதல் 77 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

(iv) முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ரூபா 300,689,704 நிலுவை வருமானத்தில் ரூபா 193,961,322 தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் 35 சதவீதம் அல்லது ரூபா 106,728,382 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. அவ்வாறு வாடகை தாமதமாவதற்காக தாமத வாடகை அறவிடும் முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(v) பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளுக்குரிய தோட்டங்கள் உப குத்தகைக்கு வழங்கப்பட்டமையினால் அந்த பிணக்குகளைத் தீர்ப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு 09/2564/306/145 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அமைச்சிற்கு பணிப்புரை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 13501 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,647,422 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ii) அமைச்சிலிருந்து வெளியிடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 09 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 99,212 தொகை 19 வருடங்கள் முதல் 29 வருடங்கள் வரையிலான காலப்பகுதிலிருந்து அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்டது.

(iii) வேலை நீக்கம் செய்யப்பட்ட அல்லது சேவை முடிவுறுத்தப்பட்ட 05 ஊழியர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 413,221 தொகை 4 வருடங்கள் முதல் 16 வருடங்கள் வரையிலான காலப்பகுதியிலிருந்து அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்டது.

(iv) சேவையிலிருந்து விலகிச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 297,274 தொகையான கடன் மீதி 2 வருடங்கள் முதல் 4 வருடங்கள் வரையிலான காலப்பகுதி முழுவதும் நிலுவையாகக் காணப்பட்டது.

## 1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) செயற்பாடற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

03 மோட்டார் வாகனங்கள் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன் அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் அந்த அறிக்கை 2014 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக 2012 ஆம் ஆண்டிற்காகவே வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**1.5 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்**

---

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட ரூபா 791,265 தொகையான நட்ட இழப்பு ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 232,500 தொகையான களஞ்சியப் பொருட்கள் காணாமல் போனமையால் ஏற்பட்ட நட்டம், இழப்பு தொடர்பாக பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**1.6 மனிதவள முகாமைத்துவம்**

---

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | ------------------------ | --------------------- | ------------------ | -------------------- |
| (i) | சிரேஷ்ட நிலை | 18 | 14 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 88 | 60 | 28 |
| (iv) | ஆரம்ப நிலை | 43 | 39 | 04 |
| | | ----------- | ----------- | -------- |
| | மொத்தம் | 152 | 115 | 37 |
| | | ==== | ==== | ===== |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 37 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 2. தலைப்பு 293 – இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு

இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

### (அ) பாதீட்டு முரண்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செலவின விடயமொன்றுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,200,000 தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 04 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய

தேறிய ஏற்பாட்டில் 30 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையிலான விச்சினைக் கொண்டிருந்தது.

(iii) 03 செலவின விடயங்களுக்காக நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் ரூபா 1,450,000 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்ததுடன் அந்த நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 1,018,331 ஆக அல்லது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 70 சதவீதம் ஆக இருந்தது.

**(ஆ) கட்டுநிதிக் கணக்கு**

---------------------------------

நிதிப் பிரமாணம் 371 இற்கு முரணாக மூன்று பதவி நிலையற்ற உத்தியோகத்தர்களுக்கு 08 சந்தர்ப்பங்களின் போது ரூபா 76,340 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

---------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 29301 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,604,014 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ii) திணைக்களத்திலிருந்து வெளியிடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 13 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 245,382 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

(iii) வேலை நீக்கம் செய்யப்பட்ட, வேலையிலிருந்து விலக்கப்பட்ட மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ரூபா 173,408 தொகையையும்

மேலும் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 1 வருடம் முதல் 4 வருடங்கள் வரையான காலமாக அறவிட வேண்டிய ரூபா 143,714 கூட்டுத்தொகையான கடன் மீதியையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஓய்வுபெற்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ரூபா 894,950 தொகையையும் மேலும் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக ரூபா 105,800 தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 29,260 தொகையையும் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 6,740 கடன் மீதியையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---------------------------------------------------------------

### 2.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

---------------------------------------------------

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தது.

### 2.4.2 உள்ளகக் கணக்காய்வு

--------------------------------------

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 2013 ஆம் ஆண்டிற்காக 20 செயற்பாடுகள் தொடர்பாக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதில் 15 செயற்பாடுகளின் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) செயற்பாடற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

திணைக்களத்திற்குரிய முச்சக்கர வண்டியொன்று 01 வருடமும் 03 மாதங்களுக்கும் மேற்பட்ட காலம் முதல் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.

### (ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத ஒரு வருடத்திற்குக் குறைவான பொறுப்புக்கள் ரூபா 75,086,407 ஆக இருந்தது.

## 2.6 வங்கிக் கணக்குகளைச் செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தால் 2013 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணகக் கூற்றுக்களில் காணப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சீராக்கங்கள் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு<br>06 மாதங்களுக்கு மேல் 01 வருடத்திற்குக் குறைவு | 01 வருடத்திற்கு மேல் 03 வருடங்களுக்குக் குறைவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தேறாத வைப்புக்கள் | - | 3,600 | 3,600 |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | வழங்கப்பட்டிருந்த போதும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 722,155 | 711,044 | 1,433,199 |
| (iii) | இனங்காணப்படாத வரவு | - | 3,349 | 3,349 |

## 2.7 முகாமைத்துவ நலிவுகள்

1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய பங்களிப்புப் பணம் அடுத்து வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் செலுத்த வில்லையாயின் மிகைக் கட்டணமொன்று செலுத்தப்படுதல் வேண்டும். இறப்பர் ஆராய்ச்சிச் சபையிலிருந்து திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்காக திணைக்களத்தினால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு முறைப்படி பங்களிப்புப் பணம் செலுத்தாமையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 89,241 தொகையினை மிகை கட்டணமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

## 2.8 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | -------------------------- | ---------------------- | ------------------- | --------------------- |
| (i) | சிரேஷ்ட நிலை | 29 | 18 | 11 |
| (ii) | மூன்றாம் நிலை | 16 | 03 | 13 |
| (iii) | இரண்டாம் நிலை | 352 | 249 | 103 |
| (iv) | ஆரம்ப நிலை | 72 | 72 | - |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை)* | 18 | 18 | - |
| | | ----------- | ----------- | -------- |
| | மொத்தம் | 487 | 360 | 127 |
| | | ==== | ==== | ===== |

* ஏனைய திணைக்களங்களினால் இணைப்புச் செய்யப்பட்டு தற்போதுள்ள பதவிகளிற்கு தனிப்பட்ட ரீதியில் இணைப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 127 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## (ஆ) ஏனைய தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட மனித வளங்கள்

-----------------------------------------------------------------------------------------------------

திணைக்களத்தினால் கீழே விபரிக்கப்பட்ட தரப்பினர்களிடமிருந்து மனித வளம் பெறப்பட்டிருந்தது.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பு | காலப்பகுதி |
|---|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வாளர் | 01 | | |
| கணக்காய்வு எழுது வினைஞர் | 01 | இறப்பர் மதியுரைச் சேவைத் திணைக்களம் மற்றும் இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம் | 1994 ஆம் ஆண்டிலிருந்து |
| விளம்பர உத்தியோகத்தர் | 01 | | |
| எழுது வினைஞர் | 14 | | |
| காவலாளி | 01 | | |